# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர்:முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A., PGDJMC.,Ph.D. DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர்: முனைவர்: ஃபாரூக் அலி எம். B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 170 | புதன்கிழமை Wednesday | 16.09.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


# ரூ.15,300 கோடி முதலீட்டு முன்மொழிவுகள்

## லண்டனில் முதலமைச்சர் விஜய் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்




லண்டன்: தமிழகத்தில் உற்பத்தி ஆலைகள், உலகளாவிய திறன் மையங்கள், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு வசதிகளை நிறுவி விரிவுபடுத்துவதற்காக தமிழகஅரசுக்கும்,முன்னணி உலகளாவிய நிறுவனங்களுக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், ரூ.15,300 கோடிக்கும் அதிகமான முதலீட்டு முன்மொழிவுகள் மூலம் மாநிலத்தில் 10,000-க்கும் மேற்பட்ட நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாகவும்தமிழகஅரசு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: முதல்வர்விஜய்முன்னிலையில் 14.9.2026 அன்று இங்கிலாந்து, லண்டனில், தமிழ்நாடு அரசின் முதலீட்டு மேம்பாட்டு முகமையான வழிகாட்டி நிறுவனத்துக்கும், முன்னணி உலகளாவிய நிறுவனங்களுக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

மேலும், ஓர் உலகளாவிய வாகன உதிரிபாகங்கள் தயாரிப்பு நிறுவனம், இந்தியாவில் தனது முதல் புதிய உற்பத்தி ஆலையை தமிழ்நாட்டில் நிறுவுவதற்கான விருப்பக் கடிதத்தை வழங்கியுள்ளது. தமிழ்நாட்டில் ஹிந்துஜா குழும முதலீடுகளின் தற்போதைய முன்னேற்ற நிலை குறித்து அக்குழுமத்தினர் முதல்வர் விஜய்யை சந்தித்து விளக்கிக் கூறினர்.

வாகன உதிரிபாக உற்பத்தி, ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மற்றும் மின்கட்டமைப்பு உபகரணங்கள் மற்றும் உலகளாவிய திறன் மையங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தங்களும், நோக்கக் கடிதமும் சேர்ந்து ரூ.15,300 கோடிக்கும் அதிகமான முதலீடுகளைக் கொண்டிருப்பதோடு, தமிழ்நாட்டில் 10,000-க்கும் மேற்பட்ட நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகளை உருவாக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

சம்வர்தனா மதர்சன் இன்டர்நேஷனல் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்: 45-க்கும் மேற்பட்ட நாடுகளில் செயல்பட்டுவரும் முன்னணி பன்னாட்டு நிறுவனமான 'சம்வர்தனா மதர்சன் இன்டர்நேஷனல் லிமிடெட்', தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் வடிவமைப்பு, பொறியியல், உற்பத்தி,ஒருங்கிணைப்பு மற்றும் தளவாடங்கள் சார்ந்த வசதிகளை நிறுவுவதன்மூலம் தனது செயல்பாடுகளை விரிவுபடுத்தத் திட்டமிட்டுள்ளது. இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ், மதர்சன் குழுமம் சுமார் ரூ.11,000 கோடி மதிப்பிலான புதிய முதலீட்டு வாய்ப்புகள் மூலம் தமிழ்நாட்டில் சுமார் 7,000 வேலைவாய்ப்புகளை உருவாக்க திட்டமிட்டுள்ளது. இந்த முதலீடுகள், மதர்சன் குழுமத்தின் பிரிட்டன் மற்றும் ஐரோப்பாவைச் சேர்ந்த கூட்டு நிறுவனங்கள் மற்றும் தொழில்நுட்பக் கூட்டாண்மையர்களுடன் இணைந்து மேற்கொள்ளப்படவுள்ளன.

இத்திட்டங்கள் தமிழ்நாட்டுக்கு மேம்பட்ட உற்பத்தித் திறன்கள், உலகளாவிய பொறியியல் நிபுணத்துவம் மற்றும் புதிய தொழில்நுட்பக்கூட்டாண்மைகளைக் கொண்டுவரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளையில், சர்வதேச வாகன உற்பத்தி மற்றும் மேம்பட்ட உற்பத்தி சார்ந்த மதிப்புச் சங்கிலிகளுடன் மாநிலத்தின் ஒருங்கிணைப்பை இவை வலுப்படுத்தும்.

இந்த முதலீடு, உயர் மதிப்புமிக்க உற்பத்தி, பொறியியல், வடிவமைப்பு மற்றும் ஏற்றுமதி சார்ந்த தொழில்களுக்கான ஒரு முக்கிய இடமாகத் தமிழ்நாட்டின் நிலையை மேலும் வலுப்படுத்துவதுடன், உற்பத்தி மதிப்புச் சங்கிலியில்தமிழ்நாடு அடுத்தகட்டத்திற்கு முன்னேறவும் வழிவகுக்கும்.

வில்சன் பவர் சொல்யூஷன்ஸ் நிறுவனத்துடன் புரிந்தணர்வு ஒப்பந்தம்: பிரிட்டனை தலைமையிடமாகக் கொண்ட, திறன்மிக்க மின்மாற்றிகளைத் தயாரிக்கும் வில்சன் பவர் சொல்யூஷன்ஸ் நிறுவனம், திருவள்ளூர் மாவட்டத்தில் தனது மின்மாற்றி உற்பத்திப் பணிகளின் அடுத்தகட்டத்திற்காக ரூ.300 கோடி முதலீடு செய்யவுள்ளது. இதன்மூலம் 400 புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும். இந்த ஆலை, மேம்பட்ட மின் மற்றும் விநியோக மின்மாற்றி உற்பத்தியில் தமிழ்நாட்டின் உற்பத்தித் திறன்களை மேம்படுத்துவதோடு, உள்ளூர் மதிப்புக் கூட்டலையும் மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த விரிவாக்கம், தமிழ்நாட்டில் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மற்றும் மின்கட்டமைப்பு உபகரணங்கள் உற்பத்திக்கான ஒரு முன்னணி மையமாகத் தமிழ்நாட்டின் நிலையை வலுப்படுத்தும். தமிழ்நாட்டில் உலகளாவிய திறன் மையங்களை அமைத்திட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்: தமிழ்நாட்டில் உலகளாவிய திறன் மையங்களை விரிவுபடுத்துவதற்கும், நிறுவுவதற்கும் இரண்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஸ்வீடனின் சிக்மா டெக்னாலஜி குழுமம்,எம்பெடட் சிஸ்டம்ஸ், மின்மயமாக்கல் மற்றும் தொழில்துறை டிஜிட்டல்மயமாக்கல் ஆகிய துறைகளில் 600 உயர் மதிப்பு வேலைவாய்ப்புகளை உருவாக்கும் நோக்கில், திருச்சிராப்பள்ளி மற்றும் சென்னையில் உள்ள தனது உலகளாவிய திறன் மையங்களை, தனது இந்திய நிறுவனமான ஸ்ரியா சொல்யூஷன்ஸ் மூலம்விரிவாக்குவதற்கு தமிழ்நாடு அரசின் வழிகாட்டி நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

# தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு உடல்நலக் குறைவு

## தி.மு.க. முப்பெரும் விழா ஒத்திவைப்பு



சென்னை: திமுக தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு திடீர் உடல்நலக் குறைவு ஏற்பட்டுள்ளதால், (15-09-2026) மாலை, நடைபெறவிருந்த "முப்பெரும் விழா" ஒத்திவைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக திமுக பொதுச் செயலாளர் துரை முருகன் வெளியிட்டுள்ள அறிக்கையில், "திமுக தலைவருக்கு காய்ச்சல் ஏற்பட்டுள்ள தன் காரணமாக, இன்று (15-09-2026) மாலை, சென்னை - அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கில் நடைபெறவிருந்த "முப்பெரும் விழா" ஒத்திவைக்கப்படுகிறது.விழா நடைபெறும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்." எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக திமுக முப்பெரும்விழா விருதுகள் அறிவிக்கப்பட்டிருந்தன. அதன்படி 2026-ம் ஆண்டுக்கான 'பெரியார் விருது' - விவசாய அணி துணைச் செயலாளர் கு.செல்லப்பா, 'அண்ணா விருது' - சேலம்மத்தியமாவட்ட அவைத் தலைவர் சேலம் ஜி.கே.சுபாஷ், 'கலைஞர் விருது' - துணைப் பொதுச் செயலாளர் திருச்சி சிவா, 'பாவேந்தர் விருது' - மருத்துவ அணித்தலைவர் கனிமொழி என்.வி.என். சோமு, 'பேராசிரியர் விருது' - தலைமைச் செயற்குழு உறுப்பினர் மிசா எஸ்.அகமது தம்பி, 'மு.க.ஸ்டாலின் விருது' - இளைஞர் அணி துணைச் செயலாளர் நா. இளையராஜா ஆகியோருக்கு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

முரசொலி அறக்கட்டளை வெளியிட்ட அறிக்கையில், "2026-ம் ஆண்டுக்கான 'முரசொலி செல்வம் விருது' ஊடகவியலாளரும் எழுத்தாளருமான ப.திருமாவேலனுக்கு வழங்கப்படும்" என தெரிவிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது.

திமுக முப்பெரும் விழாவுக்கான ஏற்பாடுகள் நடைபெற்று வந்த நிலையில், திமுக தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு திடீர் உடல்நலக் குறைவு ஏற்பட்டுள்ளதால், (15-09-2026) மாலை, நடைபெற விருந்த அந்த விழா ஒத்திவைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஈரோடு, நீலகிரி, கோவை உள்ளிட்ட

# 6 மாவட்டங்களுக்கு கனமழைக்கு வாய்ப்பு; வானிலை ஆய்வு மையம்



சென்னை:

தமிழகத்தில் நீலகிரி, கோவை உள்ளிட்ட 6 மாவட்டங்களில் நாளை (செப்.16) கனமழை பெய்ய வாய்ப்புள்ளது என வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தெற்கு உள் கர்நாடகா முதல் மன்னார் வளைகுடாவரைதமிழகபகுதிகள் வழியாக சுமார் 1.5 கிமீ உயரம் வரை ஒரு காற்றழுத்ததாழ்வுபாதை நிலவுகிறது.

இதன் காரணமாக தமிழகத்தில் நாளை (செப்.16)நீலகிரி,கோவை, திருவண்ணாமலை, வேலூர், திருப்பத்தூர் மற்றும் ராணிப்பேட்டை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும்.

இதரமேற்குதொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் திருவண்ணா மலை,கிருஷ்ணகிரி,தருமபுரி, சேலம், நாமக்கல், கரூர், ஈரோடு, திருப்பூர், திருச்சி, அரியலூர், பெரம்பலூர், விருதுநகர், மதுரை, சிவகங்கை, புதுக்கோட்டை, ராமநாதபுரம், தூத்துக்குடி மாவட்டங்களில் ஒருசில இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும். இதர தமிழகத்தில் ஒருசில இடங்களிலும் லேசான மழை பெய்யக்கூடும்.

ஆகஸ்ட் 17-ம் தேதி நீலகிரி, கோவை, கரூர், திருச்சி, பெரம்பலூர், அரியலூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும். இதர மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், ராணிப்பேட்டை,வேலூர்,திருப்பத்தூர், சேலம்,திருப்பூர், ஈரோடு, தருமபுரி, நாமக்கல், கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் ஒருசில இடங்களில் மிதமான மழையும்,இதர தமிழகத்தில் ஒருசில இடங்களில் லேசான மழையும் பெய்யக்கூடும்.

ஆகஸ்ட் 18-ம் தேதி நீலகிரி மற்றும் கோவை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கனமழையும், இதர மேற்கு தொடர்ச்சிமலைமாவட்டங்கள் மற்றும் சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர், கடலூர், மயிலாடுதுறை, விழுப்புரம்,திருப்பத்தூர், வேலூர்,ராணிப்பேட்டை, கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், நாமக்கல், கரூர், ஈரோடு, திருச்சி, அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்களில் ஒருசில இடங்களில் மிதமான மழையும், இதர தமிழகத்தில் ஒருசில இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும்.

ஆக.19-ம் தேதி நீலகிரி, கோவை, கிருஷ்ணகிரி, வேலூர், திருவண்ணா மலை, திருப்பத்தூர், ராணிப்பேட்டை மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும், இதர மேற்கு தொடர்ச்சிமலைமாவட்டங்கள் மற்றும் இதர வட தமிழக மாவட்டங்களில் ஒருசில இடங்களில் மிதமான மழையும், தென் தமிழக மாவட்டங்களில் ஒருசில இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

ஆகஸ்ட் 20, 21 தேதிகளில் நீலகிரி,கோயம்புத்தூர், திண்டுக்கல், தேனி, மதுரை, சிவகங்கை, புதுக்கோட்டை, திருச்சி, பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும், வட தமிழக மாவட்டங்களில் ஒருசில இடங்களிலும், மிதமான மழையும்,இதர தென் தமிழக மாவட்டங்களில் ஒருசில இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும்.


செய்திகள்
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில்
இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# கோவை கவுண்டம்பாளையம் பகுதியில் உள்ள பாபா அறக்கட்டளை வளாகத்தில் நடைபெற்ற விநாயகர் சதுர்த்தி விழா

## மாற்றுத்திறனாளிகளுக்கான நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியாக நடைபெற்றது



கோவை கவுண்டம்பாளையம்பகுதியில்உள்ள பாபா அறக்கட்டளை வளாகத்தில் விநாயகர் சதுர்த்தி விழா கொண்டாடப்பட்டது. விழாவில் மாற்றுத்திறனாளிகளுக்கான நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவாக நடைபெற்றது. இதனை கோவையைச் சேர்ந்த பாரதமாதா அறக்கட்டளை, சே:.ப் அறக்கட்டளை, சிஎஸ்சி முதியோர் இல்லம், சாம் சேவாலயம் அறக்கட்டளை, சுதா சாய் சௌந்தர்யம் முதியோர் இல்லம், இம்தியாஸ் அன்பு மலர் அறக்கட்டளை, யுனிவர்சல் பீஸ் பவுண்டேஷன், சிவாத்ம குருஜி, விக்டோரியா எலியா ஹோம், பானுமதி விஜயகுமார்ஆனந்தம்அறக்கட்டளை, நலேஷ்தா கருடா சித்தர் அறக்கட்டளை, தமிழ் நாவலர் அறக்கட்டளை, ராபின் அன்புமலர் அறக்கட்டளை, சிவப்பிரகாஷ் விஷால் பவுண்டேஷன், ஈஸ்வரி சிறகுகள் முதியோர் இல்லம், விஜயகுமார் தாய் உள்ளங்கள் அறக்கட்டளை, அன்பு மலர் அறக்கட்டளை, ராஜாஜி யோகானந்த சுவாமி இல்லம், யாமினி பவுண்டேஷன், அக்ஷயா பவுண்டேஷன், ரமேஷ் அன்னதான குழு நண்பர்கள், சுடர் அறக்கட்டளை, ஆதி விநாயகர் அறக்கட்டளை, புதிய பாதை குடிபோதை மையம், என பல்வேறு அமைப்புகளை சார்ந்த நண்பர்கள் ஒன்றிணைந்து விநாயகர் சதுர்த்தி விழாவினை, சீரும் சிறப்புமாக கொண்டாடி மாற்று திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளான அரசி, மளிகை பொருட்பள் சக்கர நாற்காலிகள், தள்ளுவண்டிகள், கைப்பிடிகள், என பல பொருட்கள் வழங்கபட்டது. இந்த நிகழ்ச்சியினை தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் சங்க தலைவர் கோவிந்தராஜ், துவக்கிவைத்தார். இதில் பாரதமாதா நற்பனி அறக்கட்டளை கௌரி சங்கர், தாய் உள்ளங்கள் அறக்கட்டளை விஜயகுமார், வல்ல கருப்பராயன் அருள் பீடம் கருப்பராய சாமிகள் வாராகி ஜெயலலிதாபுரை சுவாமிகள் நீலகண்ட பாஸ்கர சுவாமிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு மாற்றுத்திறனாளிகள் மற்றும் சமூகத்தில் தங்களை தாங்களே கவனித்துக் கொள்ள முடியாத மாற்று திறனாளிகளுக்கு தேவையான நலத்திட்ட உதவிகளை வழங்கினர். நிகழ்ச்சியில், அனைத்து சமூக மக்களுக்கும் உதவும் பேரவை அமைப்பின் நிறுவன தலைவரும், சமூகஆர்வலரும், வழக்கறிஞருமான புஸ்பானந்தம் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு அனைவருக்கும் வாழ்த்துக்கள் தெரிவித்து நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் பாபா அறக்கட்டளை உரிமையாளர் கனகராஜ், கிருபா, நவீன், நகுலன், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# இருதய குறைபாடுகள் மற்றும் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு உதவும் வகையில்

## ஜி.கே.என்.எம். மருத்துவமனை சார்பாக, ரன் ஃபார் லிட்டில் ஹார்ட்ஸ் எனும் மாரத்தான் போட்டியை நான்காவது முறையாக கோவையில் செப்டம்பர் 27ஆம் தேதி நடத்த உள்ளது

கோவை ஜி. குப்புசாமி நாயுடு நினைவு மருத்துவமனையில் இருதய குறைபாடுகள் மற்றும் குழந்தை பருவ புற்று நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு உதவும் நோக்கத்தில் ஆண்டுதோறும் ரன் ஃபார் லிட்டில் ஹார்ட்ஸ் எனும் தலைப்பில் மாரத்தான் போட்டிகள் நடத்தப்படுவது வழக்கம். இதன் நான்காவது பதிப்பாக கோவையில் மாபெரும் விழிப்புணர்வு மாரத்தான் போட்டி வரும் செப்டம்பர் 27ஆம் தேதி நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான டி–ஷர்ட் மற்றும் பதக்கங்கள் அறிமுகப்படுத்தும் நிகழ்வு இன்று மருத்துவமனை வளாகத்தில் நடைபெற்றது. செய்தியாளர்களை சந்தித்து பேசிய ஜி.கே.என்.எம் மருத்துவமனையின் முதன்மை நிர்வாக அதிகாரி டாக்டர் ரகுபதி வேலுச்சாமி கூறியதாவது... செப்டம்பர் மாதம் குழந்தை பருவ புற்றுநோய் விழிப்புணர்வு மாதமாகவும், செப்டம்பர் 29ஆம் தேதி உலக இருதய தினமாகவும் கடைபிடிக்கப்பட்டு வருவதால், இந்த மாரத்தான் போட்டி வரும் 27ஆம் தேதிகாலை 5:30மணிக்கு கோவை பாப்பநாயக்கன்பாளையத்தில் உள்ள மணி மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நான்காவது முறையாக நடைபெறும் இந்த மாரத்தான் போட்டியில், மூன்று வெவ்வேறு பிரிவுகளின் கீழ் போட்டிகள் நடைபெற உள்ளது. அதில் குழந்தைகள், குடும்பங்கள் மற்றும் மூத்த குடிமக்கள் என அனைத்து வயதினரும் இணைந்து ஓடக்கூடிய அளவில் ஒன்று மற்றும் 3 கிலோமீட்டர் பிரிவுகள், அடுத்ததாக 12 முதல் 18 வயது வரையிலான சிறுவர் மற்றும் சிறுமியர் மற்றும் 18 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள் பெண்களுக்கான ஐந்து கிலோமீட்டர் ஓட்ட பந்தயம், இறுதி பிரிவாக 18 முதல் 39 வயது வரையில் உள்ளவர்கள், மற்றும் 40 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான 10 கிலோமீட்டர் பிரிவு ஆகும். 5 மற்றும் 10 கிலோமீட்டர் பிரிவுகளின் வெற்றி பெறுபவர்களுக்குரூபாய் 80 ஆயிரம் மதிப்பிலான ரொக்கப்பரிசுகள் வழங்கப்பட உள்ளது. மேலும் கோவை மாவட்ட தடகள சங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ள இந்த மாரத்தான் போட்டிக்கு பல்வேறு தனியார் நிதி நிறுவனங்கள் ஆதரவழித்துள்ளதாகவும் தெரிவித்தார். கடந்த ஆண்டு சுமார் 3000 பேர் கலந்து கொண்டுள்ளனர், இதில் கிடைத்த நிதியின் கீழ் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட 42 குழந்தைகள் பயனடைந்தனர். இந்த ஆண்டு 3000த்திற்கும் மேலாக பொதுமக்கள் இந்த மாரத்தான் போட்டியில் கலந்து கொள்ளுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறதாக தெரிவித்தார்..

# கோவை பெரியநாயக்கன்பாளையம் துணை, காவல் கண்காணிப்பாளருக்கு பனை விதைகளை தமிழ்நாடு பனை தொழிலாளர்கள் மற்றும் அனைத்து உடல் உழைப்பு கட்டுமான பொது தொழிலாளர்கள் நல வாரியத்தின் மாநில பொதுச்செயலாளர் மாரியப்பன் வழங்கினார்



தமிழ்நாடு பனை தொழிலாளர்கள் மற்றும் அனைத்து உடல் உழைப்பு கட்டுமான பொது தொழிலாளர்கள் நல வாரியத்தின் மாநில பொதுச் செயலாளர் மாரியப்பன், கோவை மாவட்டம் பெரியநாயக்கன்பாளையம் மாவட்ட காவல்துறை துணை கண்காணிப்பாளர் கனகசபாபதியை, சந்தித்து தமிழ்நாடு அளவில் 5 கோடி பனைமரக்கன்றுகள் நடவு செய்ய வேண்டும் என்றும், அதற்கு எடுத்துக்காட்டாக பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சி மன்ற அலுவலகத்துடன் இணைந்து மாவட்ட காவல்துறை துணை கண்காணிப்பாளர் அவர்களுடைய தலைமையில், 1500 பனை மரக்கன்றுகள் நடவு செய்யலாம் என்றும் ஆலோசனை வழங்கினார். அதற்கு பனைமரத்தின் விதையை மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளருக்கும் வழங்கினார். இவர்களுடன் மாநிலத் தலைவர் ராதா, மற்றும் மாநில இளைஞரணி தலைவர் எஸ் சார்லஸ், மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பெத்தநாடார்பட்டி சி.எஸ். ஐ. நல்ல சமாரியன் ஆலயத்தின் 15வது தேவ ஆலய பிரதிஷ்டை பண்டிகை

## டாக்டர் இம்மானுவேல் பங்கேற்பு



தென்காசி மாவட்டம், பெத்தநாடார்பட்டியில் உள்ள தென்னிந்திய திருச்சபை சி.எஸ்.ஐ திருநெல்வேலி திருமண்டலம், திப்பண ம்பட்டி சேகரம் சி எஸ் ஐ நல்ல சமாரியன் ஆலயத்தின் 15–வது தேவ ஆலய பிரதிஷ்டை பண்டிகை சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு திப்பணம்பட்டி சேகர தலைவரும் பாவூர்சத்திரம் சேகரத் தலைவருமாகிய அருள்திரு.த.ஜாண் கிங்ஸ்லி பர்ணபாஸ் தலைமை வகித்தார்.

நிகழ்ச்சிக்கு திப்பணம்பட்டி சேகர குருவானவர் டி. தங்கபிரபு ஆரம்ப ஜெபம் செய்து பண்டிகை ஆராதனையை தொடங்கி வைத்தார். இரட்சணியபுரம் சேகரத் தலைவர் அருள்திரு. ஜாண்செல்வம் பண்டிகை செய்தியை வழங்கினார்.

ஆராதனையில் சிறப்பு விருந்தினராக திருநெல்வேலி பாரத் ஸ்கேன் நிறுவனரும், நம்ம டாக்டருமான இம்மானுவேல், அருள்திரு.ராபர்ட் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்

இந்த நிகழ்ச்சியை பெத்தநாடார்பட்டி சபை ஊழியர் சந்திரபோஸ் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார் பண்டிகை ஆராதனைக்கு சிறப்பு விருந்தினராக வருகை தந்த அனைவரையும் திப்பணம்பட்டி சேகர குருவானவர் டி.தங்க பிரபு வரவேற்றார், மேலும் திப்பணம்பட்டி சேகர சபை ஊழியர்கள் ஓசியாஜெபராஜ், அஜித்சாமுவேல் ராஜன், ராபின், எல்.சி.எப் பொறுப்பாளர் ஷீபாராணிஅருள் முகிலன், பெத்தநாடார்பட்டி பஞ்சாயத்து தலைவர் ஜெயராணி கலைச்செல்வன், மற்றும் திப்பணம்பட்டி சேகரத்திற்கு உட்பட்ட அனைத்து சபை மக்களும், வெளியிடங்களில் இருந்தும் அநேக சபை மக்களும் கலந்து கொண்டனர்.

ஆலயத்திற்கு வருகை தந்த அனைத்து மக்களின் காணிக்கைகளை சேகரத்தலைவர்அருள்திரு.ஜாண் கிங்ஸ்லி பர்ணபாஸ் பெற்றுக் கொண்டு திருச்சபை மக்கள் அனைவரும் ஆசீர்வதித்தார்

இறுதியாக திப்பணம்பட்டி சேகரத் தலைவர் அருள்திரு. ஜாண் கிங்ஸ்லி பர்ணபாஸ் ஜெபம் செய்து, ஆலய பிரதிஷ்டை பண்டிகை ஆராதனை நிறைவுற்றது.

# கோவை ஆர்.எஸ்.புரம் பகுதியில், ஸ்ரீ வித்தக விநாயகர் திருக்கோவில் விநாயகர் சதுர்த்தி விழா



கோவை ஆர் எஸ் புரம் பகுதியில், அருள்மிகு ஸ்ரீ வித்தக விநாயகர் திருக்கோவில் அமைந்துள்ளது. இத்திருக்கோவிலின், 37 வது ஆண்டு விநாயகர் சதுர்த்தி திருவிழா நிகழ்ச்சி கோலாகலமாக நடைபெற்றது.

கோவை ஆர் எஸ் புரம் பகுதியில், அருள்மிகு ஸ்ரீ வித்தக விநாயகர் திருக்கோவில் அமைந்துள்ளது. இத்திருக்கோவிலில், அருள்மிகு ஸ்ரீ வித்தக விநாயகர் திருக்கோவில் அறக்கட்டளை, கோயம்புத்தூர் ஆர் எஸ் புரம் வடக்கு குடியிருப்பவர் நலச் சங்கம், பாஸ்யகாரலு சாலை, மேற்கு பகுதி மக்கள் இணைந்து நடத்தும் 37 வது ஆண்டு விநாயகர் சதுர்த்தி திருவிழா நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில், ஆதரவற்ற குழந்தைகள், மற்றும் மனநலம் குன்றிய குழந்தைகள், உடல் ஊனமுற்ற குழந்தைகள், மற்றும் மாணவ, மாணவிகள் என பலரும் அழைத்து வந்து சிறப்பு பூஜைகள் நடைபெற்றது இதனை தொடர்ந்து, அனைவருக்கும், அன்னதானங்கள் வழங்கபட்டது. முன்னதாக, மாணவ மாணவிகள், குழந்தைகளுக்கு, பழங்கள் வழங்கபட்டு விநாயகர் சதுர்த்தி விழா கொண்டாட பட்டது, மேலும் சிறப்பு அலங்காரத்தில் சிறப்பான பூஜைகளும், விநாயகருக்கு நடைபெற்றது. விழாவுக்கான ஏற்பாடுகளை திருக்கோவில் அறங்காவலர் குழு தலைவர் சிவதேசிகன், அர்ச்சகர் வாசுதேவன், செயளாலர் செல்வம், பொருளாளர் சீதாராம் கன்கானீ, துணை தலைவர் சீனிவாசன், இணை செயலாளர் விக்னேஷ்வர் சங்கர் ஆகியோர் செய்து இருந்தனர். மேலும் கடந்த, 37 ஆண்டுகளாக தமிழகத்தில், தினமும் 108 மூலிகைகளால் யாகம் செய்து காலை நேரத்தில் அபிஷேகம்செய்துசிறப்புடன் செய்து வருகின்றகோயிலாக இத்திருக்கோவில் அமைந்துள்ளது. இங்கு தொடர்ச்சியாக பக்தர்களுக்கு, கூழ், பாயாசம், மாலையில்பலகாரங்கள் வழங்கி ஆன்மீக பக்தர்களுக்கு வேண்டிய வரங்களை அள்ளித் தருகின்ற தெய்வமாக, அருள்மிகு ஸ்ரீ வித்தக விநாயகர்கோவில்சிறப்பு பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# விநாயகர் சதுர்த்தி ஏற்பாட்டின்போது சோகம்

## மின்சாரம் தாக்கி இளைஞர் உயிரிழப்பு; மேலும் 5 பேர் காயம்



ராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு தாலுகா, அரும்பாக்கம் கிராமம் மேட்டுத் தெருவைச் சேர்ந்த கெங்கன் – சாந்தி தம்பதியரின் இரண்டாவது மகன் உத்தீரமூர்த்தி வயது:35 மின்சாரம் தாக்கி உயிரிழந்த சம்பவம் அப்பகுதி மக்களிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு அரும்பாக்கம் கிராமத்தில் சறுக்கு மரம் அமைக்கும் பணிகள் நடைபெற்றதாக கூறப்படுகிறது. அப்போது சறுக்கு மரத்தை நிமிர்த்தும் முயற்சியில், அருகில் சென்ற மின்கம்பியில் மரம் உரசியதாகவும், இதனால் மின்சாரம் பாய்ந்து, கையில் வைத்திருந்த இரும்புக் கம்பி மூலமாக மின்சாரம் தாக்கியதில் உத்தீரமூர்த்தி சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாகவும் கூறப்படுகிறது.

இந்த சம்பவம் பொதுமக்கள் முன்னிலையில் நடைபெற்றதாகவும், மின்சாரம் தாக்கியதில் உத்தீரமூர்த்தி துடிதுடித்து உயிரிழந்த சம்பவம் அங்கிருந்தவர்களை அதிர்ச்சியிலும் சோகத்திலும் ஆழ்த்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், அவருடன் இருந்ததாக கூறப்படும் 5 பேரும் மின்சாரம் தாக்கி காயமடைந்து, சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

உத்தீரமூர்த்தியின் மறைவு அரும்பாக்கம் கிராம மக்களிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.



# தென்காசி தொகுதி சர்வதேச மனித உரிமைகள் கழக தலைவர் முரளி – இந்திராதேவி இல்லத் திருமண விழா

தென்காசி மாவட்டம், ஆலங்குளம் அருகே கரும்பனூரில் உள்ள ஸ்ரீ முப்புடாதி அம்மன் திருக்கோவில் வளாகத்தில், தென்காசி தொகுதி சர்வதேச மனித உரிமைகள் கழக தலைவர் முரளி - இந்திராதேவி ஆகியோரது இல்லத் திருமண விழா வெகு விமரிசையாக நடைபெற்றது.இதில் மணமக்கள் வே.விஜயராஜ் –மு. மேகலா ஆகியோரது திருமணம் சிறப்பாக நடைபெற்றது. விழாவில் டாக்டர் சுரேஷ் கண்ணன், முன்னாள் காவல் துணை கண்காணிப்பாளர் ஜெயராஜ், முன்னாள் ஆசிரியர் லிங்கசாமி, வழக்கறிஞர் துரைஇளங்கோ, தமிழ்நாடு காவல்துறை உதவி ஆய்வாளர் கல்யாணசுந்தரம்,புதுப்பட்டி சக்கரிட்டிஸ் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

மேலும், மனித உரிமைகள் கழக மாநில தலைவர் மாரியப்பன், சென்னை நாடார் பேரவை சுப்பிரமணியன் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

திருநெல்வேலி பாரத் ஸ்கேன் நிறுவனரும், நம்ம டாக்டர் இமானுவேல் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்.

விழாவில் அய்யனார்குளம் முத்துபாண்டி ஜே.என்.எப். பொறியாளர் குழந்தை இயேசு, புதுப்பட்டி புதுக்குமார், ஜெயக்குமார், வெட்டும் பெருமாள், குமார், குமாஸ்தா தங்கராஜ், செந்தில், அரிரங்கநாதன், செல்லப்பாண்டியன், காளத்திமடம் சேகர், குத்துலிங்கம், முரளி, மகாராஜன், ரவி, மலர்செல்வம், கண்ணன், கணேசன், ரஜினி சக்தி, அருணாச்சலம் உள்ளிட்ட உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

# ஈரோடு மொக்கையன் பாளையத்தில், எஜமானின் உயிரை காப்பாற்ற தனது உயிரை இழந்த வளர்ப்பு நாய்



ஈரோடு மாவட்டம், வில்லரசம்பட்டி அருகே உள்ள மொக்கையன் பாளையத்தில் சண்முகம் என்பவர் குடும்ப த்துடன் வசித்து வருகிறார், இவர் ஒருகூலித்தொழிலாளி ஆவார்,இவரது வீட்டில் நாய் ஒன்றையும் வளர்த்து வருகிறார்,

இந்நிலையில், சண்முகம் வேலைக்கு சென்று இருந்த நிலையில், இவரது வீட்டிற்குள் நாக பாம்பு ஒன்று நுழைந்துள்ளது, இந்த பாம்பை பார்த்த இந்த வளர்ப்பு நாய், தனது உரிமையாளரை பாதுகாக்கவீட்டில்தொடர்ந்து குரைத்தவாறு பாம்பை விரட்ட முயன்றது,

நாய் தொடர்ந்து குறைத்துக் கொண்டிருந்ததால் அக்கம்பக்கத்தினர் வந்துபார்த்துள்ளனர், அப்போது பாம்புடன்,நாயும்போராடிக் கொண்டிருப்பதை பார்த்துள்ளனர்,

இந்நிலையில், ஐந்தரை அடி நீளம் உள்ள நாகப்பாம்பு பாம்பு, நாயை கொத்திவிட்டு வீட்டிற்குள் இருந்த சிலாபுக்கு அடியில் சென்று பதுங்கிக் கொண்டது,

இதனை அடுத்து பாம்பு பிடிக்கும் இளைஞர் யுவராஜாவை அழைத்ததின் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த யுவராஜா பாம்பு பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டு, அந்த ஐந்தரை அடி நீளம் உள்ள நாகபாம்பை லாவகமாக பிடித்தார்,

இதனை அடுத்து அந்தப் பாம்பு ஈரோடு வனத்துறையினரிடம் கொண்டு சென்று யுவராஜா ஒப்படைத்துள்ளார்,

## ஈரோடு மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி

## பேரறிஞர் அண்ணாவின் 118வது பிறந்த நாளையொட்டி

# தந்தை பெரியார் அண்ணா நினைவகத்தில் உள்ள அவரது திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்



ஈரோடு மாநகராட்சி, பெரியார் வீதியில் உள்ள தந்தை பெரியார் அண்ணா நினைவகத்தில், பேரறிஞர் அண்ணா அவர்களின் 118–வது பிறந்த நாளையொட்டி அவரது திருவுருவச்சிலைக்கு, மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (15.09.2026) மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

தமிழ்நாடு அரசின் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் மூலம் தந்தை பெரியார் அவர்கள் வாழ்ந்த இல்லம் நினைவகமாக மாற்றப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. பெரியார் அண்ணா நினைவகத்தில் செயல்பட்டு வரும் நூலகத்தில் தமிழ்நூல்கள், ஆங்கில நூல்கள் மற்றும் அன்பளிப்புநூல்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது. தந்தைபெரியார் அவர்களின் பத்திரிக்கைநிறுவனத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் பணியாற்றிய போது அவருக்கு தமது இல்லத்தில் பேரறிஞர் அண்ணாஅவர்கள்,தங்குவதற்குஇடம்அமைத்து கொடுத்திருந்தார். பேரறிஞர் அண்ணா அவர்கள் ஈரோடு மாவட்டத்தில் இருந்த காலத்தில் வாழ்ந்து வந்த அந்த இல்லமானது தந்தை பெரியார் நினைவு இல்லத்துடன் சேர்ந்தே உள்ளது. இந்த இல்லத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் எழுதுவதற்கு பயன்படுத்திய மேசை, நாற்காலி,அரிக்கேன்விளக்கு, அந்த வீட்டின் சமையற்கூடம் ஆகியவை அதே நிலையில் பாதுகாப்பாக தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் பேறறிஞர் அண்ணா அவர்கள் மற்றும் தந்தை பெரியார் அவர்களுடைய காலங்களில் அவர்கள் கலந்து கொண்ட நிகழ்ச்சிகளின் தொகுப்பு,முக்கிய தலைவர்களுடனான சந்திப்பு, அவர்கள் எழுதிய கடிதங்களின் தொகுப்புகளின் புகைப்படங்கள் என 155 க்கும் மேற்பட்ட புகைப்படங்கள் காட்சிபடுத்தப்பட்டுள்ளது.

பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாள் விழா ஆண்டுதோறும், செப்டம்பர் 15 அன்று தமிழ்நாடு அரசின், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் கொண்டாடப்பட்டு வருகிறது. அதன்படி, நேற்றைய தினம் (15.09.2026) தந்தை பெரியார் அண்ணா நினைவகத்தில் நடைபெற்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் 118–வது பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு, மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்ச்சியில், மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் டி. சண்முகன், ஈரோடு மாநகராட்சி மேயர் சு. நாகரத்தினம் சுப்பிரமணியம், ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின் , மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், முதன்மை கல்வி அலுவலர் முனைவர்.மான்விழி, ஈரோடு வருவாய் வட்டாட்சியர் கவிதா, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் சு.மகேஸ்வரன். உதவி மக்கள் தொடர்பு அலுவலர்கள்செ.கலைமாமணி (செய்தி) செந்தில்குமார் (விளம்பரம்) உட்பட தொடர்புடைய துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## அண்ணாவின் 117வது பிறந்தநாள் விழா:

# ஆற்காட்டில் தி.மு.க. சார்பில் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை



ஆற்காடு: பேரறிஞர் அண்ணாவின் 117–வது பிறந்தநாளை முன்னிட்டு, ஆற்காடு அண்ணா சாலையில் அமைந்துள்ள அண்ணா சிலைக்கு திமுக ஆற்காடு நகரக் கழகம் சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.இந்நிகழ்ச்சிக்கு ஆற்காடு நகரக் கழகச் செயலாளர் ஏ.வி. சரவணன் தலைமை வகித்தார். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஜே. எல். ஈஸ்வரப்பன், மாவட்டப் பொருளாளர் ஏ.வி. சாரதி, நகரமன்றத் தலைவர் ஜே.பி. பென்ஸ் பாண்டியன் உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் மற்றும் கழகத் தொண்டர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். தொடர்ந்து, நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டன.

## கோவை பிரசன்னா கியாவில்

# புதிய கியா சோரென்டோவை அறிமுகப்படுத்தியுள்ளது

## அமைச்சர் சம்பத்குமார் துவக்கி வைத்தார்



கியா இந்தியாவின் அங்கீகரிக்கப்பட்ட டீலரான பிரசன்னா கியா, கோயம்புத்தூர் மெர்லிஸ் ஹோட்டலில் புதிய கியா சோரென்டோவை அறிமுகப்படுத்தியது. இந்த நிகழ்வில் தமிழப அமைச்சர் சம்பத் குமார், சிங்காநல்லூர் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் ஸ்ரீ கிரி பிரசாத், கியா இந்தியாவின் மண்டல விற்பனை மேலாளர் கௌரவ் குமார், பிரசன்னா குழுமத்தின் நிர்வாகஇயக்குநர்செந்தில் குமார் மற்றும் பிரசன்னா குழுமத்தின் இணைநிர்வாகஇயக்குநர் அனிஷ் பிரசன்னா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்தியாவில் கியாவின் முதல் ஹைப்ரிட் மாடலாக அறிமுகமாகியுள்ள சோரென்டோ, ரூ.27.99 லட்சம் முதல் கிடைக்கிறது. பிரீமியம் வடிவமைப்பு, ஹைப்ரிட் தொழில்நுட்பம், மேம்பட்ட பாதுகாப்பு அம்சங்கள் மற்றும் நவீன வசதிகளை ஒருங்கிணைத்து, சோரென்டோ புதிய தலைமுறை வாடிக்கையாளர்களுக்கான சிறப்பான ஓட்டுநர் அனுபவத்தை வழங்குகிறது.

இந்த நிகழ்வில் பேசிய பிரசன்னா குழுமத்தின் இணைநிர்வாகஇயக்குநர் அனிஷ் "பிரசன்னா கூறுகையில்,"புதிய கியா சோரென்டோவை எங்கள் வாடிக்கையாளர்களிடம் கொண்டு வருவதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். இந்த அறிமுகம் பிரசன்னா கியாவிற்கு ஒரு பெருமைமிக்க மைல்கல்லாகும். மேலும், கியாவின் புதிய மற்றும் மேம்பட்ட தயாரிப்புகளை வாடிக்கையாளர்களுக்கு நெருக்கமாக கொண்டு சேர்ப்பதில் எங்களது தொடர்ச்சியான முயற்சியின் முக்கியமான ஒரு பகுதியாக இந்தஅறிமுகம்அமைந்துள்ளது. எங்கள் ஷோரூம்களுக்கு வருகை தந்து சோரென்டோவை நேரடியாக அனுபவிக்கவும், அதன் ஹைப்ரிட் தொழில்நுட்பம், பிரீமியம் வசதி மற்றும் மேம்பட்ட அம்சங்களை அறிந்துகொள்ளவும்,மேலும் இயக்கத்தின் இந்த உற்சாகமான புதிய அத்தியாயத்தில் ஒரு பகுதியாக இருக்கவும் வாடிக்கையாளர்களை நான் அழைக்கிறேன், என்றார்.

கோயம்புத்தூர், ஈரோடு,திருப்பூர்,பொள்ளாச்சி, கரூர், நாமக்கல் மற்றும் ஊட்டி உள்ளிட்ட பகுதிகளில் உள்ள பிரசன்னாகியாஷோரூம்களிலும் கியா சோரென்டோ வாடிக்கையாளர்களுக்கு கிடைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதன் மூலம் கொங்கு மண்டலத்தின் பல்வேறு பகுதிகளில் பிரீமியம் கியா வாகன அனுபவத்தை வழங்குவதற்கான தனது உறுதிப்பாட்டை பிரசன்னா கியா மேலும் வலுப்படுத்துகிறது.

## எலப்பாக்கத்தில் அதிமுக சார்பில்

# பேரறிஞர் அண்ணாவின் 118வது பிறந்தாளையொட்டி அன்னதானம்

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தின் செங்கல்பட்டுகிழக்குமாவட்ட செயலாளர் திருக்கழு குன்றம் எஸ் ஆறுமுகம் அவர்களின் ஆணைக்கிணங்க அச்சிறுப்பாக்கம் தெற்கு ஒன்றிய செயலாளர் டாக்டர் ரங்கராஜன் அறிவுறுத்தலின் பேரில் அனைத்து உலக எம்ஜிஆர் மன்ற செயலாளர் அனந்தமங்கலம் சுப்பிரமணியன் ஒப்புதலுடன் முன்னாள் முதலமைச்சர் அண்ணா 118வது பிறந்த நாளை முன்னிட்டு எலப்பாக்கம் கிராமத்தில் கிளை செயலாளர் சக்கரபாணி தலைமையில் அண்ணா திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர் அதனை தொடர்ந்து



நிகழ்ச்சியில் கலந்து கொண்ட கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்களுக்குஅறுசுவை உணவு வழங்கப்பட்டது இந்நிகழ்ச்சியில் எலப்பாக்கம் கிளைக் கழக நிர்வாகிகள் பாஸ்கர்ராமச்சந்திரன்ஸ்ரீராம் தனசேகர் ஏழுமலை செந்தில் குமரேசன் உள்ளிட்ட நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் திரளானோர் கலந்து கொண்டனர்



ஈரோடு மாவட்டம், அந்தியூர், பச்சாம்பாளையத்தில் விவசாயி தன் விளைநிலத்தில் தேசிய எண்ணெய்வித்து அபிவிருத்தி திட்டத்தின் கீழ் நிலக்கடலை சாகுபடி செய்யப்பட்டுள்ளதை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (15.09.2026) நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.



ஈரோடு மாவட்டம், அந்தியூர் கிளை நூலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (15.09.2026) ஆய்வு மேற்கொண்டார்.

## ஈரோட்டில் பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து முன்னாள் அமைச்சர் சு.முத்துசாமி மரியாதை



ஈரோடு: பேரறிஞர் அண்ணா பிறந்தநாளை முன்னிட்டு, ஈரோடு தெற்கு மாவட்ட திமுக சார்பில், முன்னாள் அமைச்சரும், ஈரோடு தெற்கு மாவட்டக் கழகச் செயலாளருமான சு.முத்துசாமி தலைமையில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இதையொட்டி, பெரியார் நகர் முகாம் அலுவலகம் மற்றும் மணல்மேடு பகுதியில் உள்ள ஈரோடு தெற்கு மாவட்டக் கழக அலுவலகமான கலைஞர் அறிவாலயம் ஆகிய இடங்களில் பேரறிஞர் அண்ணாவின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, பன்னீர்செல்வம் பூங்காவில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணாவின் திருவுருவச் சிலைக்கும், வீரப்பன் சத்திரத்தில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணாவின் திருவுருவச் சிலைக்கும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் பேரறிஞர் அண்ணா பிறந்தநாள், தந்தை பெரியார் பிறந்தநாள் மற்றும் திமுக கழகம் உதயமான நாள் ஆகிய மூன்று சிறப்புமிக்க நாட்களும் ஒருங்கிணைந்து முப்பெரும் விழாவாக கொண்டாடப்பட்டு வரும் நிலையில், பேரறிஞர் அண்ணா பிறந்தநாளான 15.09.2026 அன்று இந்த மரியாதை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் சு.முத்துசாமி அண்ணாவின் திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். தொடர்ந்து, கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களும் அண்ணாவின் திருவுருவப் படங்கள் மற்றும் சிலைகளுக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

நிகழ்ச்சியில் ஈரோடு தெற்கு மாவட்ட திமுக நிர்வாகிகள், பல்வேறு அணிகளின் நிர்வாகிகள், கழகத் தொண்டர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## நந்தா சித்த மருத்துவக் கல்லூரியில் மாநில அளவிலான ஆட்டிசம் குழந்தைகளுக்கான போட்டிகள்



நந்தா சித்த மருத்துவக் கல்லூரியின் சார்பில் ஈரோடு சிறகுகள் மற்றும் வடக்கு ரோட்டரி சங்கத்துடன் இணைந்து மாநில அளவிலான ஆட்டிசம் குழந்தைகளுக்கான போட்டிகள் இனிதே நடத்தப்பட்டன.

ஆட்டிசம் பாதிப்புடைய குழந்தைகளின் தனித்திறமைகளைக் வெளிகொணரவும் அவர்களின் தன்னபிக்கை மற்றும் சமூகப் பங்களிப்பினை ஊக்குவிக்கும் பொருட்டு நடைபெற்ற இப்போட்டிக்கு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.ஏ. செங்கோட்டையன் தலைமைத் தாங்கினார். மேலும் கைத்தறித்துறை அமைச்சர் விஜய் பாலாஜி, மற்றும் முன்னாள் அமைச்சர் கே.வி. ராமலிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டார்கள்.

இவர்களுடன் ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் தலைவர் வி. சண்முகன், அங்கத்தினர் பானுமதி சண்முகன், இணை நிர்வாக அறங்காவலர்களான எஸ்.நந்தகுமார் பிரதீப், எஸ். திருமூர்த்தி மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் சாந்தகுமார் ஆகியோர் முன்னிலைவகித்தார்கள். முன்னதாக கல்லூரியின் குழந்தை உளவியலாளர் மருத்துவர் கிருத்திகா வரவேற்புரை நிகழ்த்தினார்.

பின்னர் அமைச்சர் பெருமக்கள் பேசுகையில், மாநில அளவில் நடைபெறும் போட்டிகள் ஆட்டிசம் குழந்தைகளின் திறமைகளை அங்கரீத்து, அவர்களுக்கு சமமான வாய்ப்புகளை உருவாக்குவது சமூகத்தின் முக்கிய கடமை என வலியுறுத்தினார்கள். குழந்தைகளின் திறமைகளை வளர்ப்பதில் பெற்றோர், ஆசிரியர்கள், மருத்துவர்கள் மற்றும் சமூகத்தின் பங்களிப்பு மிகவும் அவசியம் என்று தெரிவித்தார்கள். ஊர்களிலிருந்து 100க்கும் மேற்பட்ட ஆட்டிசம் ஆசிரியர்களுடன் கலந்து கொண்டு ஊக்கம் இப்போட்டிகளில் தமிழகத்தின் பல்வேறு குழந்தைகள் தங்கள் பெற்றோர் மற்றும் சிறப்பு அளித்தார்கள். இதன் காரணமாக குழந்தைகள் தங்கள் திறமைகளை மிகுந்த ஆர்வத்துடனும் உற்சாகத்துடனும் வெளிப்படுத்தி மகிழ்ந்தார்கள்.

வெற்றிப் பெற்ற மாணவர்களுக்கு கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் பரிசுகளை வழங்கி பாராட்டினார்.

இதனைத் தொடாந்து, நிர்வாக அலுவலர் முனைவர் ஜி. தர்மராஜ் மேற்பார்வையில் நந்தா சித்த மருத்துவக் கல்லூரியின் மருத்துவர்கள், பயிற்சி மருத்தவர்கள், மாணவர்கள் ஆகியோர் மருத்துவ ஆலோசனைகளை வழங்கினார்கள். நிகழ்வின் முடிவில் கல்லூரியின் முதல்வர் மருத்துவர் மேனகா நன்றியுரை வழங்கினார்.

## “தமிழகத்தில் மின்வெட்டு உள்ளது உண்மைதான்” வி.சி.க. தலைவர் திருமாவளவன் பேட்டி



திருச்சி: "தமிழகத்தில் மின்வெட்டு உள்ளது என்பது உண்மைதான். அரசு இதில் கூடுதல் கவனம் செலுத்தி, அதனை சீர் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்" என விசிக தலைவர் திருமாவளவன் தெரிவித்தார்.

திருச்சியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், "ஆ.ராசா, சேகர்பாபு மீது வழக்குகள் போடப்பட்டிருக்கிறது. அரசியல் ரீதியாக, கொள்கை ரீதியாக விமர்சிப்பதைத் தாண்டி, தனிநபர் ரீதியாக ஒருமையில் விமர்சித்தார் என்பது அதிர்ச்சியளிக்கிறது. திமுக நீண்ட நெடிய பாரம்பரியமுள்ள இயக்கம். தற்போது ஆர்ப்பாட்ட மேடைகளில் அவர்கள் பேசிய பேச்சு பொதுமக்கள் முகம் சுழிக்கும் வகையில் அமைந்திருந்தது என்பதை மறுக்க முடியாது. பயிர்க்கடன் தள்ளுபடி தொடர்பான அரசின் நிலைப்பாட்டில் விவசாயிகள் அதிருப்தியில் உள்ளனர். இதனை முதல்வர் விஜய்யின் கவனத்துக்கு கொண்டு சென்றுள்ளேன். தமிழகத்தில் மின்வெட்டு உள்ளது உண்மைதான். அரசு இதில் கூடுதல் கவனம் செலுத்தி, அதனை சீர் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அதிகாரிகள் சொல்லும் தகவல்களை கொண்டுதான் அமைச்சர்கள் பதில் சொல்கின்றனர். அதிகாரிகள் முறையான, சரியான தகவல்களை அமைச்சர்களுக்கு தரவேண்டும் என்பது எனது வேண்டுகோள்.

தமிழகம் மட்டுமல்ல இந்தியா முழுவதும் இடைத்தேர்தல்களில் பணத்தை கொட்டி இறைக்கிறார்கள் என்பது அனைவரும் அறிந்த உண்மை. வாக்குகளை விலைக்கு வாங்குவது அண்மைக்காலமாக அதிரிகரித்துள்ளது.

வரவுள்ள இடைத்தேர்தலில் அவ்வாறு நடைபெறக் கூடாது. தேர்தல் ஆணையம் இதனை தடுத்து நிறுத்த வேண்டும். தவெக கொடியின் வண்ணத்தில் அரசுப் பேருந்துகளில் வண்ணம்தீட்டுவது என்பது ஏற்புடையது அல்ல. எந்தக் கட்சியும் அரசாங்கத்தில் அந்த வண்ணத்தை பூசக் கூடாது" என்றார்.

## Govt says no UPI charges up to 2,000, Congress scoffs: Inside the digital wallet row



*The Centre on Monday notified a change to the Payment and Settlement Systems Act to say that no charges can be imposed on UPI transactions of up to 2,000, settling one part of a broader debate over fees on a system that is now used for transfers of small everyday sums to tens of thousands of rupees.*

*The Ministry of Finance said in the gazette notification that the prohibition, issued under Section 10A of the Act, covers two categories: payments made through RuPay debit cards, and UPI transactions up to the 2,000 threshold. No bank or system provider, the notification says, may impose any charge, directly or indirectly, on a person making or receiving payment through these modes.*

*Will UPI payments above 2,000 attract a fee?*

*No – at least not for the consumer. Speaking in the Rajya Sabha on August 11, when Parliament cleared the Taxation and Other Laws (Amendment) Bill, 2026, finance minister Nirmala Sitharaman said the amendment to Section 10A was "an enabling provision" that "does not impose any tax or transaction charge on UPI users".*

*She was categorical that no fee would apply to street hawkers, cab drivers, kirana stores or small merchants either. Any fee that does eventually come in, she said, would be paid by merchants, not by the person making the payment. What the Bill will does is remove an existing provision that had barred banks and payment service providers from charging a Merchant Discount Rate (MDR) on UPI. That is what has kept the debate alive – nominal charges could yet apply on certain limited merchant transactions.*

*MDR is a small fee that merchants pay to banks and payment companies each time a customer makes a digital payment. A customer pays a shopkeeper through a digital payment system, and the shopkeeper pays a small processing fee to the payment provider.*

*While that is the norm, in reality, many pass on MDR to customers, especially in high value card transactions where it does not have the same waiver as it does in UPI.*

*UPI has been exempt from MDR since 2020, a policy choice meant to push India away from cash and towards digital payments.*

*Why is MDR back under discussion?*

*UPI is the world's largest retail real-time payment system by transaction volume, according to a 2025 International Monetary Fund report. It processed 24.51 billion transactions worth 29.82 lakh crore in August. Running a network of that scale – technology, cybersecurity, fraud prevention, customer support – costs money.*

*Those costs are currently borne by banks, third-party payment apps and the National Payments Corporation of India (NPCI). The Union government has also been providing annual budgetary incentives to banks to offset the cost of the zero-MDR regime.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004, Editor FARUK ALI M.